மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கேள்வியிலேயே பாலாறு என்றுதான் இருக்கிறது.

மதுரை மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கம்

*305 வினா—**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்ட கூட்டுறவு சப்ளை மார்க்கெட்டிங் சொசைட்டி லிமிடெட்டின் போர்டு டிஸ்மிஸ் செய்யப்பட்டு ஸ்பெஷல் அதிகாரி நியமிக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஸ்பெஷல் அதிகாரி நியமனத்திற்குப் பின் சொசைட்டியின் வியாபாரம் அபிவிருத்தி அடைந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) பொதுவாக வளர்ச்சி காணப்படுகிறது.

வட ஆற்காடு மத்திய கூட்டுறவு வங்கியின் குழு

*306 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு மத்திய பேங்கு போர்டைக் கலைக்க நோட்டீஸ் எப்பொழுது எதற்காக கொடுக்கப்பட்டது ?

(இ) அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) விவர அறிக்கை* ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த விவர அறிக்கையிலே 'மன நிறைவுதரும் வகையில் நடக்கவில்லை. கடன் தொகையை ஆராய்தல், அதற்கு ஒப்பளிப்பு வழங்கல், கடன் வழங்கல் ஆகியவை குறித்துக் கடுமையான முறைகேடுகள் நடந்ததாகத் தெரிய வந்துள்ளது' என்று இருப்பதுபோல் இது எல்லாம் கண்டுபிடித்ததற்குப் பிறகு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றாலும் நீதிமன்றத்திற்குப் போனதற்குப் பிறகு அது நேர் விரோதமான முறையிலே தவறு செய்யக்கூடியவர்களுக்குச் சாதகமான முறையிலே தீர்ப்பு அளிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்றால். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கே தீர்ப்பளிக்கப்பட்டதா, இங்கே தீர்ப்பளிக்கப்பட்டதா ?

---

* 102–103-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : கூட்டுறவுச் சட்டத்திலே குறைபாடுகள் இருக்கின்றன. அதைப் போக்குவதற்காக சந்தானம் கமிட்டி போட்டு அந்தக் கமிட்டி ரிப்போர்ட் வந்ததற்குப் பிறகு இதுவரையிலும் புதிய சட்டம் வரவில்லை. எப்பொழுது வரும், உடனடியாகக் கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு வங்கியைப் பொறுத்தவரையில் அதிலே உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி 1—12—1967 அன்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. சம்பந்தப்பட்டவர்கள் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று, 28—2—1969 அன்று, அவர்களுக்குத் தீர்ப்பளிக்கப்பட்டது. தீர்ப்பில் காணப்பட்டதை விவர அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேன். தீர்ப்பில் என்ன சொல்லப்பட்டது என்றால் இந்தச் சங்கத்தின் நிர்வாகக் குழுவின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும் எடுக்கப்பட்ட நடவடிக்கை அண்மையில் நடந்த தவறுகளைப்பற்றி இருக்கவேண்டும். 72-வது விதியின்படி, நிகழ்காலத்தில் என்று இருக்கிறது. அதைக் கடந்த காலம் என்று மாற்ற வேண்டும். சட்டத்தை நாம் திருத்தியாக வேண்டும். அதற்கும் சந்தானம் கமிட்டிக்கும் சம்பந்தம் ஒன்றும் இல்லை. திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. க. மு. இராசகோபால் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மூலம் தமிழகத்திலே எத்தனை தவறுகள் நடந்திருக்கின்றன ? எந்த எந்த மாவட்டத்தில் நடந்திருக்கின்றன ? அதிலே எடுக்கப்பட்டிருக்கிற நிதியை அதாவது கையாடல் செய்யப்பட்ட பணம் எவ்வளவு என்பதைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை.

Pathans engagedd in money-lendding business.

* 307 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state the number of Pathans doing money-lending business in this State?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 130 (நூற்று முப்பது)

THIRU K. S. KOTHANDARAMIAH : Are these money-lending Pathans submitting any returns or accounts to Government?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்பொழுது இருக்கிற சட்டப்படி மணி லெண்டிங் வியாபாரம் என்று சொன்னாலும் அரசாங்க அனுமதிபெற்றுத்தான் நடத்தப்படுகிறது. தாசில்தார், துணைத் தாசில்தார் இவர்களால் அனுமதி கொடுக்கப்பட்டு, இந்த மாநிலத்தில் 130 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர்கள் நடத்திக்கொண்டு வருகிறார்கள்.